ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்-148) Jun (2) / 2013



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு


1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)…………………......3

2. ஸ்ரீபாஷ்யம் ……………………………………………………………………......6

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………………….……....8

4. ஸ்ரீவசனபூஷணம்……………………………………………………………….....14

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..……....……………………………………....22

6. திருவிருத்தம்.........................…………………………………………………......29

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 125)

## 761. ஸத்யமேதா:

இடையர்களிடமும் வஸுதேவர் முதலானவர்களிடமும் ஒரு நாடகம் போன்று அல்லாமல், தன்னை ஸத்யமாகவே அவர்களில் ஒருவராக எண்ணியிருந்தான். இவன் அவர்களிடம் கீழே உள்ளது போன்று உரைத்தான்:

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-13-14) – அஹம் வோ பாந்தவோ ஜாத: - நான் உன்னுடைய (தேவகி) கர்ப்பத்தில் ஜனித்தேன்

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-13-1) – யதி வோஸ்தி மயி ப்ரீதி: ச்லாக்யோஹம் பவதாம் யதி ததாத்மபுத்திஸத்ருசீ புத்திர்வ: க்ரியதாம் மயி – க்ருஷ்ணன் ஆயர்களிடம், “நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கிறீர்கள் என்றால், என்னைப் போற்றத்தக்கவன் என்று எண்ணியுள்ளீர்கள் என்றால், என்னை உங்களில் ஒருவனாகவே உங்களைப் போன்றே எண்ணவேண்டும்”, என்றான்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-13-11) – நாஹம் தேவோ ந கந்தர்வோ ந யக்ஷோ ந ச மாநவ: அஹம் வோ பாந்தவோ ஜாத: ந வச்சிந்த்யம் அதோந்யதா – க்ருஷ்ணன் ஆயர்களிடம், “நான் தேவனோ, கந்தர்வனோ, யக்ஷனோ, அசுரனோ அல்லன். நான் உங்களில் ஒருவன், உங்களுடைய பந்து

ஆவேன். என்னை வேறுபடுத்தி எண்ணவேண்டாம். உங்களில் ஒருவனாகவே எண்ணுங்கள்", என்றான்.

## 762. தராதர:

கோவர்த்தனம் என்னும் மலையைத் தரித்தவன். ஶ்ரீவிஷ்ணுபுராணம் (5-13-13) – ததேததகிலம் கோஷ்டம் த்ராதவ்யமதுநா மயா இமமத்ரிமஹம் தைர்யாத் உத்பாத்யாசு சிலாதநம் தாரயிஷ்யாமி கோஷ்டஸ்ய ப்ருதுச்சத்ரமிவாபரம் – இப்போது இந்த ஆயர்பாடி என்னால் காப்பாற்றத் தக்கதாக உள்ளது. ஆகவே இப்போது நான் தைரியமாக இதனைக் காப்பாற்ற பெரிய குடையைப் பிடித்தது போன்று இந்த மலையை எடுத்துத் தாங்குகிறேன் – என்றது காண்க.

## 763. தேஜோவ்ருஷ:

தன்னுடைய அடியார்களைக் காப்பாற்றுதல் என்பதான மிகப் பெரிய தேஜஸ்ஸைப் பொழிபவன்.

## 764. த்யுதிதர:

இந்தக் காரணத்தினால்தான், சிறிய வயதாக உள்ளபோதிலும் இந்த்ரனையும் வெல்லவல்லதான, மனிதர்களுக்கு இல்லாத காந்தியை உள்ளவன்.

## 765. ஸர்வசாஸ்த்ரப்ருதாம்வர:

நரகாசுரன், ஜராஸந்தன் போன்றவர்களுடன் செய்த யுத்தத்தில் ஆயுதம் தரித்த அனைவரைக் காட்டிலும் மேலாக விளங்கியவன். ஶ்ரீவிஷ்ணுபுராணம் (5-33-14) – மநுஷ்யதர்மலீலஸ்ய லீலா ஸா ஜகத்பதே: அஸ்த்ராண்யநேகரூணாபி யத் அராதிஷு முஞ்சதி – சத்ருக்களிடம் பலவிதமான அஸ்த்ரங்களைப் பிரயோகித்தல்

என்பது, மனிதர்களைப் போன்று விளையாடும் ஜகந்நாதனின் ஒருவிதமான விளையாட்டே ஆகும் – என்றது காண்க.

## 766. ப்ரக்ரஹ:

அர்ஜுனனுக்குக் கடிவாளம் இட்டு, அவனை ஓட்டிச் செல்பவன்.

## 767. நிக்ரஹ:

அர்ஜுனனுடைய புருஷத்தன்மையை எதிர்பாராமலேயே, தன்னுடைய தேரோட்டும் திறமையாலே சத்ருக்களை அழிக்கவல்லவன்.

அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 148)

**பூர்வபக்ஷம்** - ஆனந்தமயன் என்பது ஜீவனைக் காட்டிலும் வேறான ஒன்றாக இருக்க முடியாது; என்ன காரணம் என்றால், விகாரத்தை (மாற்றம்) உணர்த்தவல்ல பொருளில் இங்கு மயட் என்ற விகுதி பயன்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது. மயட் என்ற பதம் விகாரத்தை உணர்த்துவதாக பாணினி ஸூத்ரத்தில் (4-3-143) - மயட் த்வைதயோ – மயட் என்பது இரண்டுவிதமான மாற்றத்தைக் குறிப்பதாக - என்று முதலில் கூறப்பட்டது. மேலும் பாணினிஸூத்ரம் (4-3-144) – நித்யம் வ்ருத்தசாதிப்ய: - வ்ருத்தத்திலும் சரத்திலும் - என்றது; அதாவது மயட் என்ற விகுதி, வ்ருத்தம் மற்றும் சரம் ஆகிய பதங்களின் பின்னே வரும்போது விகாரத்தை உணர்த்தும் என்று கருத்து. இங்கு உள்ள ஆனந்த என்ற பதம் வ்ருத்தமாகும். ஆனால் இதற்கு நாம் (ஸித்தாந்திகள்) ஒரு ஆக்ஷேபம் தெரிவிப்போம். பாணினிஸூத்ரம் (5-4-21) - தத் ப்ரக்ருத வசநே மயட் - அதிகமாக உள்ளதை காட்டுவது மயட் என்று கூறப்பட்டது அல்லவோ; உதாரணமாக, அந்நமயோ யஜ்ஞ: - என்று கூறப்பட்டது காண்க - என்று நாம் ஆக்ஷேபம் செய்கிறோம். இதற்குப் பூர்வபக்ஷி மறுத்துக் கூறுவது - அப்படி அல்ல. அன்னமயம் என்பதும் விகாரத்தை உணர்த்துவதாகவே தொடக்கத்தில் உள்ளதை நாம் காணலாம். அதற்கு முரண்பாடு ஏற்படக்கூடாது என்பதால், ஆனந்தமயன் என்பதையும் அது போன்றே கொள்ள வேண்டும். அப்படியே நீங்கள் (ஸித்தாந்திகள்) கூறுவது போன்று, ஆனந்தமயம் என்பதில் உள்ள மயட் விகுதியானது "அபரிமிதமாக உள்ளது" என்று குறித்தாலும், அது ஜீவன் அல்லாத வேறு ஒரு வஸ்துவைக் குறிக்கும் என்று நிருபிக்க இயலாது. ஜீவன் அபரிமிதமான ஆனந்தம் உள்ளவன் என்று கூறும்போது, அவன் துக்கம் என்பதோடு முற்றிலுமாக தொடர்பு அற்றவன் என்று கூற இயலாது (அதாவது துக்கத்துடன் உள்ள தொடர்பைத் தவிர்க்க

இயலாது). அதிகமான ஆனந்தம் உள்ளவன் என்பதன் மூலம் சிறிய அளவில் துக்கத்தை உள்ளவன் என்பது உணர்த்தப்படுகிறது. துக்கத்துடன் பிணைந்து இருத்தலே ஜீவனின் இயல்பாகும். ஆகவே மயட் என்ற விகுதி மாறுதலை (விகாரத்தை) உணர்த்துவதாகவே உள்ளது என்றே கொள்ளவேண்டும். உலகத்தில் ம்ருந்மயன் (மண்ணால் ஆனது), தாருமயம் (மரத்தால் ஆனது) போன்ற வாக்கியங்களிலும், கீழே உள்ள வேறு வாக்கியங்களிலும்:

- தைத்திரீய ஸம்ஹிதை (3-5-6) – பர்ணமயி ஜுஹு: - இலையால் ஆன பாத்திரம்
- தைத்திரீய ப்ராஹ்மணம் (3-8-2) - சமீமய்ய: ஸ்த்ருச: தர்ப்பமயீ ரசநா - மரத்தால் ஆன கரண்டி, தர்ப்பத்தால் ஆன கோல்

போன்ற பலவற்றிலும் உள்ள மயட் என்ற விகுதியானது, விகாரத்தைக் குறிப்பதாகவே மனதிற்குத் தோன்றுகிறது. மேலும் ஜீவன் மாறுபாட்டுடன் கூடிய ஆனந்தம் கொண்டவனாகவே உள்ளான் ஆவான். அவன் ஆனந்தமயனான உள்ளபோதிலும், ஸம்ஸாரத்தில் உள்ள நிலை என்பது அதன் மாற்றத்தாலேயே ஆகிறது. ஆகவே மயட் என்ற விகுதி மாறுபாட்டினை உணர்த்துவதாகவே உள்ளதால், ஆனந்தமயன் என்ற பதம் ஜீவனையே குறிக்கும்; வேறு யாரையும் குறிக்காது. இதற்கான சமாதானத்தை அடுத்த சூத்திரத்தில் உரைக்கிறார்.

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 148)

## ப்ரபந்நனுக்கான உபாயம்

**மூலம்** – அடியிலே நிரபராதனாக வேணுமென்று கோலி ப்ரபத்தி பண்ணினவனுக்கும் பின்பு இதுக்காக ப்ரபத்யந்தரம் பண்ணினவனுக்கும் உத்தரக்ருத்யம் நிரபராதமாகவே நடக்கும்.

**விளக்கம்** – முதலில் ப்ரபத்தி செய்யும்போதே தன்னுடைய வாழ்க்கையில் பாவங்கள் நீங்க வேண்டும் என்று எண்ணியபடி ப்ரபத்தி செய்தவனுக்கும், பின்னர் ஒரு காலகட்டத்தில் இனி உள்ள வாழ்க்கையில் பாவம் ஏற்படக்கூடாது என்று மீண்டும் ப்ரபத்தி செய்பவனுக்கும் அதன் பின்னர் பாவங்கள் ஸம்பவிப்பதில்லை.

## அறிந்தே செய்யும் பாவங்களுக்கு ப்ராயச்சித்தம் அவசியமாகும்

**மூலம்** – இதிஹாஸ புராணங்களில் சில வ்ருத்தாந்த தர்சநமாத்ரத்தைக் கொண்டு வசந விரோதத்தை அநாதரித்து பாகவதனுடைய புத்திபூர்வோத்தராகம் க்ஷந்தவ்யமென்று சிலர் சொல்லுவார்கள். இதுவும் அவ்வோ ப்ரகரணங்களில் அபிப்ராயம் அறியாமல் வந்தது. மஹாராஜருக்கும் உள்பட ஸமயாதிலங்கநமாத்ரமான அபராதம் பெருமாள் திருவுள்ளத்திலே சோகாபிபவத்தாலே ப்ரதிபாஸித்து

ந ச ஸங்குசித: பந்தா யேந வாலீ ஹதோ கத:
ஸமயே திஷ்ட ஸுக்ரீவ மா வாலிபதமந்வகா:

என்று அருளிச்செய்யக் கேட்டு இளையபெருமாள், பெருமாள் தாமே தணியவிட வேண்டும்படி சீறியருளிக் கிஷ்கிந்தையிலே செல்ல,

க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம்
அந்தரேணாஞ்ஜலிம் பத்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத்

என்று இந்த்ர வ்யாகரண பண்டிதன் மஹாராஜருக்கு உபதேசித்தானிறே. அவ்வளவில் மஹாராஜரும் இசைந்து

யதி கிஞ்சிததிக்ராந்தம் விச்வாஸாத் ப்ரணயேந வா
ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே ந கச்சிந்நபராத்யதி

என்று விண்ணப்பம் செய்ய வேண்டிற்று. அப்போது இளையபெருமாளுக்கும் தாம் மிகுதியாகச் சொன்ன வார்த்தைகளுக்கு

யச்ச சோகாபிபூதஸ்ய ச்ருத்வா ராமஸ்ய பாஷிதம்
மயா த்வம் புருஷாண்யுக்த: தச்ச த்வம் க்ஷந்துமர்ஹஸி

என்று க்ஷமை கொள்ளவேண்டிற்று. இப்படி ப்ரபந்நனுக்கும் ப்ராரப்த கர்ம விசேஷங்களாலே புத்திபூர்வோத்தராகம் புகுரவும் கூடும்; அவை புகுந்தால் அநுதப்தனாய் க்ஷமை கொள்ளவும் வேணும்.

**விளக்கம் –** ஒரு சிலர் இதிஹாஸம் மற்றும் புராணங்களில் உள்ள நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு, சாஸ்த்ரங்களில் கூறப்படுவதற்கு முரணாக, ப்ரபந்நன் ஒருவன் அறிந்து கொண்டே பாவங்கள் செய்தாலும் பொறுத்துக் கொள்ளப்படும் என்று கூறுவார்கள். இவர்களின் இந்தச் சிந்தனையானது, அந்த ப்ரகரணங்களின் நிலை அறியாத காரணத்தால் உண்டானதாகும். ஓர் உதாரணம் காண்போம். சுக்ரீவன் இராமனுக்கு உதவுவதாக வாக்களித்தான்; ஆனால் அந்தக் காலம் கழிந்த பின்னரும் வந்து உதவவில்லை; இதனால் உண்டான அபராதம் என்பது

இராமனின் திருவுள்ளத்தில் சோகமாக உருவெடுத்தது. இதனால் இராமன் இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (30-81) - ந ச ஸங்குசித: பந்தா யேந வாலீ ஹதோ கத: ஸமயே திஷ்ட ஸுக்ரீவ மா வாலிபதமந்வகா: - வாலியை அழித்த மார்க்கமானது இன்னும் அடைக்கப்படாமல் உள்ளது; சுக்ரீவா! ஆகவே நீ அளித்த வாக்கின்படி நடப்பாயாக, வாலி போன மார்க்கத்தில் செல்லாதே – என்றான். இதனைக் கேட்ட லக்ஷ்மணன் மிகுந்த சீற்றம் கொண்டான்; அப்போது அவனைச் சமாதானம் செய்த இராமன் அவனை கிஷ்கிந்தைக்கு அனுப்பினான். லக்ஷ்மணனின் சீற்றத்தை உணர்ந்த இலக்கண பண்டிதனாகிய அனுமன் சுக்ரீவனிடம், இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (32-11) - க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம் அந்தரேணாஞ்ஜலிம் பத்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத் – மிகுந்த அபராதம் செய்துள்ள நீ (சுக்ரீவன்), உன்னுடைய கைகளால் லக்ஷ்மணை வணங்கி, பொறுத்துக் கொள்ளுமாறு விண்ணப்பம் செய்வதைக் காட்டிலும் வேறு உபாயத்தை (அனுமனாகிய) என்னால் காண இயலவில்லை – என்றான். இதனை ஏற்றுக் கொண்ட சுக்ரீவன் லக்ஷ்மணனிடம், இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (36-11) - யதி கிஞ்சிததிக்ராந்தம் விச்வாஸாத் ப்ரணயேந வா ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே ந கச்சிந்நபராத்யதி – என்னுடைய தன்னம்பிக்கையாலோ அல்லது அன்பினாலோ நான் ஏதேனும் அபராதம் செய்திருந்தால் என்னை மன்னிக்கவேண்டுகிறேன். இந்த உலகில் குற்றம் செய்யாதவர்கள் யாரும் இல்லை – என்றான். இதனைக் கேட்ட லக்ஷ்மணன், தான் சுக்ரீவனைக் குறித்து உரைத்த சொற்களைச் சிந்தித்து, இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (36-28) - யச்ச சோகாபிபூதஸ்ய ச்ருத்வா ராமஸ்ய பாஷிதம் மயா த்வம் புருஷாண்யுக்த: தச்ச த்வம் க்ஷந்துமர்ஹஸி – மிகுந்த துன்பத்தில் ஆழ்ந்துள்ள இராமனின் சொற்களைக் கேட்டதன் காரணமாகவே நான் உன்னைக் குறித்துக் கடுமையான சொற்கள் உரைத்தேன். இதனை நீ பொறுத்துக் கொள்ளவேண்டும் – என்று சுக்ரீவனிடம் மன்னிப்பு கோரினான் அல்லவோ? ஆகவே ப்ரபந்நன் ஒருவன், பலன் தரத் தொடங்கிவிட்ட பூர்வஜன்ம கர்ம பலன்கள் காரணமாக உண்டாகும் அபராதங்களுக்கு ஏற்ற ப்ராயச்சித்தங்களைச் செய்தே தீரவேண்டும்; அவற்றுக்காக மன்னிப்பும் கேட்கவேண்டும்.

ஆளவந்தார் மற்றும் ஆழ்வார்களின் கூற்றுகளில் உள்ள ஆழ்கருத்து

**மூலம்** – "ந தர்மநிஷ்டோஸ்மி", "குளித்து மூன்றனலையோம்பும் குறிகொள் அந்தணமை தன்னை ஒளித்திட்டேன்" இத்யாதிகளும் கர்மயோகாதிகளுக்குச் சக்தியில்லாமல் சொல்லுகிறவத்தனை; யதாசக்தி பகவதாஜ்ஞாநுபாலநத்தைத் தவிரச் சொல்லுகிறனவன்று. ஆகையால் ப்ரபந்நனுக்கும் ப்ராஹ்மண்யாதி விசிஷ்ட சரீரம் விடுமளவும் அவ்வோ ஜாத்யாதிகளுக்கு ஈடான பகவதாஜ்ஞாநுபாலநம் கர்த்தவ்யம்.

**விளக்கம்** – ஸ்தோத்ரரத்னம் (22) - ந தர்மநிஷ்டோஸ்மி – நான் எந்தவிதமான தர்மங்களையும் கைக்கொள்ளவில்லை - என்றும், திருமாலை (25) - குளித்து மூன்றனலையோம்பும் குறிகொள் அந்தணமை தன்னை ஒளித்திட்டேன் – நீராடிய பின்னர் அந்தணன் ஒருவன் செய்யவேண்டிய கர்மங்களை நான் விட்டேன் – என்றும் கூறப்பட்ட வாக்கியங்கள் கர்மயோகத்தில் ஈடுபடுவதற்கான சக்தி இல்லை என்பதை மட்டுமே உணர்த்துகின்றன; அவை நம்முடைய சக்திக்கு உட்பட்ட ஸர்வேச்வரனுடைய ஆணைகளை மீறும்படி உரைக்கவில்லை. ஆகவே ப்ரபந்நன் என்றாலும், ப்ராஹ்மண்யம் முதலான ஜாதியைக் கொண்டுள்ள இந்தச் சரீரம் அழியும்வரை, அந்த ஜாதிக்கு ஏற்றபடி உள்ள பகவானின் ஆணைப்படி உள்ள தர்மங்களைச் செய்தே ஆகவேண்டும்.

ஆஹார க்ரஹ மந்த்ரார்த்த ஜாத்யாதி நியமைர்யுத:
குர்யால்லக்ஷ்மீச கைங்கர்யம் சக்தி அநந்ய ப்ரயோஜந:

**பொருள்** – உணவில் உள்ள கட்டுப்பாடுகள், ஆசார்ய பரம்பரை மூலமாக வந்த ஞானத்தை மட்டுமே ஏற்கவேண்டும் என்னும் கட்டுப்பாடுகள், தனக்காக விதிக்கப்பட்ட வேதங்களில் உள்ள மந்த்ரங்களைக் கொண்டு மட்டுமே கர்மம் செய்யவேண்டும் என்னும் கட்டுப்பாடுகள், நேர்மையான முறையில் இயற்றப்பட்ட செல்வம் மூலம் மட்டுமே கர்மங்களைச் செய்யவேண்டும் என்னும் கட்டுப்பாடுகள், இன்ன ஜாதியைச் சேர்ந்தவர்கள் இன்ன கர்மத்தை மட்டுமே செய்யவேண்டும் என்னும் கட்டுப்பாடுகள் முதலானவற்றுடன் கூடியவனாக, வேறு பலனை

எதிர்பாராமல், தன்னுடைய சக்திக்கு ஏற்றபடி மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸ்ரீமந்நாராயணனுக்குக் கைங்கர்யம் செய்வானாக.

ஆசாராத்மகுணோபாய புருஷார்த்த விசேஷத:
அதிகாரிணி வைசிஷ்டயம் ப்ரக்ருஷ்யேதோத்தரோத்தரம்

**பொருள்** – தர்மங்களைச் சரியாகக் கடைபிடித்தல், தயை முதலான ஆத்மகுணங்கள், பகவானிடம் பக்தி, புருஷார்த்தங்கள் ஆகியவற்றின் பெருமைகளால் ஒரு அதிகாரியிடம் காணப்படும் மேன்மை என்பது மேலும் உயர்த்தியை அடையும்.

**மூலம்** – இப் ப்ரபாவநியமம் ரஹஸ்யத்ரயத்தில் ஈச்வரனுடைய ப்ரசாஸித்ருத்வாதி குணாநுபந்தமாக அநுஸந்தேயம்.

**விளக்கம்** – இப்படியாக உள்ள ப்ரபத்தி என்பதன் ப்ரபாவம், ரஹஸ்யத்ரயமாக உள்ள திருமந்த்ரம், த்வயமந்த்ரம் மற்றும் சரமச்லோகத்தால் கூறப்படும் ஸர்வேச்வனுடைய திருக்கல்யாணம் குணங்களுடன் ஸம்பந்தம் உள்ளவை என்று அறிக.

தகவால் தரிக்கின்ற தன்னடியார்களைத் தன் திறத்தில்
மிகவாதாஞ் செய்யு மெய்யருள் வித்தகன் மெய்யுரையின்
அகவா யறிந்தவ ராரணநீதி நெறிகுலைதல்
அகவாரென் வெங்கள் தேசிக ருண்மை யுரைத்தனரே

**பொருள்** – தன்னுடைய கருணை மூலமே தரிக்கின்ற தன்னுடைய அடியாகளாகிய ப்ரபந்நர்களை, தன்னைப் போன்று ஆக்குவதில் மிகுந்த அக்கறை காண்பிக்கின்ற, ஆச்சர்யமான செயல்களைக் கொண்ட க்ருஷ்ணன் அருளிச்செய்த சரமச்லோகத்தின் ஆழ்பொருளை வ்யாஸர் முதலானோர் நன்கு அறிவார்கள்; ஆகவே அவர்கள் உபநிஷத்துக்களில் உரைக்கப்பட்ட தர்ம மார்க்கம் தவறுவதை

விரும்பமாட்டார்கள்; இப்படியாக உள்ள உண்மையை எங்களுடைய ஆசார்யர்கள் எங்களுக்கு உபதேசித்தனர்.

சாதுர்வர்ண்ய சதுர்விதாச்ரமமுகே பேதே யதாவஸ்திதே
வ்ருத்தம் தந்நியதம் குணாநுகுணயா வ்ருத்தயா விசிஷ்டம் ச்ரிதா:
த்யாகோபப்லவ நித்ய தூர சரணவ்ரஜ்யா விதௌ கோவிதா:
சிந்தாம் அப்யுகுணந்தும் அந்திமயுகே அபி ஏகாந்திந: ஸந்தி ந:

**பொருள்** – நான்கு ஜாதிகள், நான்கு ஆச்ரமங்கள் ஆகியவற்றுக்கு இடையே உள்ள பேதங்கள் சாஸ்த்ரங்களில் கூறியபடி உள்ளன. விஷ்ணுவின் பக்தனாக இருப்பதற்கு ஏற்ற அநுஷ்டானங்களால் கூடின ஜாதி மற்றும் ஆச்ரமம் ஆகியவற்றுக்கு ஏற்றதான நடத்தை உள்ளவர்களாகவும், வர்ணாச்ரம தர்மங்களைக் கைவிடுதல் என்பதாகிய குற்றத்துக்கு எப்போதும் தொலைவில் உள்ளதான ப்ரபத்தி செய்யும் விஷயத்தில் ஸாமர்த்யம் உள்ளவர்களாகவும் இருக்கின்ற பரமைகாந்திகளாகிய ப்ரபந்நர்கள் – இந்தக் கலியுகத்திலும் தங்களுக்குரிய தர்மங்களின்படி வாழ்ந்து, நாம் அவர்களைப் பற்றி ஆராயும் ரீதியில் உள்ளனர்.

ப்ரபாவ வ்யவஸ்த அதிகாரம் ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 104)

352. தோஷமுண்டென்று நினைக்கில் அது பரதோஷமன்று, ஸ்வதோஷம்.

**அவதாரிகை** - தோஷமில்லை என்று ஸ்வபக்ஷத்தாலே ஸாதித்தார் கீழ்; இனி, பரபக்ஷத்தாலே தோஷ ஸத்பாவத்தை அங்கீகரித்துக் கொண்டு தத்பரிஹாரத்தை அருளிச்செய்கிறார் மேல் (தோஷமுண்டு) என்று தொடங்கி.

**விளக்கம்** - பகவானிடமும் பாகவதர்களிடம் எந்தவிதமான தோஷமும் இல்லை என்று தன்னுடைய கருத்தின்படி இதுவரை உரைத்தார். இனி மற்றவர்களின் பார்வையில் அவர்கள் மீது தோஷம் ஏற்படலாம் என்பதை ஒப்புக்கொண்டவராக, அதற்கான பரிகாரத்தை இனி உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, கீழ்ச் சொன்னபடியன்றிக்கே பகவத் பாகவத விஷயங்களில் தோஷமுண்டென்று நினைக்கில், அவர்கள் பக்கல் தனக்குத் தோற்றுகிற தோஷம் அவர்கள் தோஷமன்று; தத் த்ரஷ்டாவான தன்னுடைய தோஷமென்கை.

**விளக்கம்** - கடந்த சூர்ணையில் விவரிக்கப்பட்டபடி பகவான் மற்றும் பாகவதர்கள் மீது எந்தவிதமான தோஷமும் இல்லை என்பதை ஒப்புக் கொள்ளாமல், அவர்களிடம் தோஷம் உண்டு என்று எண்ணினால் – அவர்கள் விஷயத்தில் தோன்றுகிற தோஷம் என்பது உண்மையில் அவர்களிடம் இல்லை; யார் அவ்விதம் தோஷம் உள்ளதாக எண்ணுகிறார்களோ அவர்களுக்கே உள்ளது என்று கருத்து.

353. ஸ்வதோஷமானபடி யென்னென்னில்.

**அவதாரிகை** - அது ஸ்வதோஷமானபடியை ஸாதிக்கைக்காக தத்விஷய ப்ரச்நத்தை அநுவதிக்கிறார் (ஸ்வதோஷமானபடி யென்னென்னில்) என்று.

**விளக்கம்** - அது அவ்விதம் எண்ணுபவர்களிடம் உள்ள குற்றமே என்பதை விளக்கும் விதமாக, அது குறித்த கேள்வியை எழுப்பிக்கொள்கிறார்.

**வ்யாக்யானம்** - பரகதமாய்த் தோற்றுகிறவது ஸ்வதோஷமானபடி யெங்ஙனே யென்னி லென்றபடி.

**விளக்கம்** - மற்றவர்களிடம் காண்கின்ற குற்றம் என்பது எவ்விதம் தன்னிடம் காணப்படும் குற்றமாகும் என்று கருத்து.

354. ஸ்வதோஷத்தாலும் பந்தத்தாலும்.

**அவதாரிகை** - அதுக்குத்தர மருளிச்செய்கிறார் (ஸ்வதோஷத்தாலும்) இத்யாதியாலே.

**விளக்கம்** – அதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, காசாதிதுஷ்ட த்ருஷ்டிமானுக்கு, சந்த்ர த்வித்வாதிகள் தோற்றுமாப்போலே, நிர்தோஷமான விஷயங்களிலே தோஷம் தோன்றும்படியான துர்வாஸநா துஷ்ட சித்ததையாகிற ஸ்வதோஷத்தாலும், பித்ராதிகள் தோஷம் புத்ராதி களதாமாப்போலே அவர்களுக்குண்டான தோஷம் தன்னதாம்படி அவர்களோடு தனக்குண்டான பந்த விசேஷத்தாலு மென்கை. (ஸ்வதோஷத்தாலும்) என்கிறவிது, அத்தலையில் தோஷாபாவத்தைப் பற்றச் சொல்லுகிறது; மற்றையது, தோஷவத்தையை அங்கீகரித்துக்கொண்டு சொல்லுகிறது.

**விளக்கம்** – கண் நோயால் பாதிப்படைந்த ஒருவனுக்குச் சந்த்ரன் இரண்டு உள்ளதாகத் தோன்றும். இது போன்று குற்றம் இல்லாதவகள் விஷயத்தில் குற்றத்தைக் காண்பது என்பது தீய பழக்கம் காரணமாகக் கெடுக்கப்பட்ட மனத்தை உடைய தனது குற்றத்தாலே ஏற்படுகிறது. மேலும் மாதாபிதாக்களின் குற்றம் பிள்ளைகள் மீது வருவது போன்று, அவர்களுக்கு உண்டான தோஷம் (அவர்கள் மீது கற்பிக்கப்பட்ட குற்றம்) என்பது தன்னுடையது என்று அவர்களுடன் ஏற்பட்ட பந்தம் காரணமாகவும் கொள்ளலாம். "ஸ்வதோஷத்தாலும்" என்பதன் மூலம் மற்றவர்களிடம் தோஷம் இல்லை எனப்பட்டது; "பந்தத்தாலும்" என்பதன் மூலம் அவர்களிடம் குற்றம் இருப்பதாக ஒப்புக்கொண்டு உரைப்பதைக் காட்டுகிறார்.

355. ஸ்வதோஷமில்லையாகில் குணப்ரதிபத்தி நடக்கும்.

**அவதாரிகை** - ஸ்வதோஷத்தாலே என்னலாவது தோஷந்தானுண்டானாலன்றோ வென்ன அருளிச்செய்கிறார் (தோஷமில்லையாகில்) என்று தொடங்கி.

**விளக்கம்** - "ஸ்வதோஷம்" என்று கூறுவதன் மூலம் அத்தகைய குற்றம் தனக்கு இருந்தால் அல்லவோ பொருந்தும் என்று கேட்கலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, சந்த்ர த்வித்வ தர்சநஹேதுவான சக்ஷுர்தோஷமில்லாதபோது சந்த்ரைகத்வமே தோற்றுமாப்போலே, தோஷதர்சந ஹேதுவான ஸ்வசித்த தோஷமில்லாதபோது பகவத் பாகவத விஷயங்களில் குணப்ரதிபத்தியே நடக்குமென்கை. அது நடவாமையால் தோஷமுண்டென்று கொள்ளவேணுமென்று கருத்து.

**விளக்கம்** – சந்த்ரன் இரண்டு என்று தோன்றுவதற்குக் காரணமான கண் நோய் இல்லாதபோது, சந்த்ரன் ஒருவனாக மட்டுமே தோன்றுவது போன்று, குற்றத்தைக் காண வைப்பதான தனது மனக்குற்றம் இல்லாதபோது, பகவானிடமும்

பாகவதர்களிடமும் குணங்களை மட்டுமே காண்பர். இப்படிக் குணத்தைக் காணாமையால், தன்னிடம் தோஷம் உண்டு என்றாகிறது.

356. நடந்ததில்லையாகில் தோஷ ஜ்ஞாநமே தோஷமாம்.

**அவதாரிகை** - நடந்ததில்லையாகில் வரும் தோஷமென்னென்ன அருளிச்செய்கிறார் (நடந்ததில்லையாகில்) என்று தொடங்கி.

**விளக்கம்** - அவர்களுடைய குணத்தைப் பற்றிய சிந்தனை உண்டாகவில்லை என்றால் ஏற்படும் தோஷம் என்ன என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, குணப்ரதிபத்தி நடவாதொழிந்தால் தோஷ ப்ரதிபத்தியிறே நடப்பது, அந்த தோஷ ஜ்ஞாநந்தானே இவனுக்கு பகவந் நிக்ரஹ ஹேதுவான தோஷமாம்; இதடியாக வேறொரு தோஷமுண்டாமென்ன வேண்டாவென்கை. இத்தால், இது அவச்யம் பரிஹரணீய மென்னுமிடம் சொல்லிற்றாய்த்து.

**விளக்கம்** – "குணம் உண்டு" என்ற சிந்தனை ஏற்படவில்லையென்றால், "குற்றம் உண்டு" என்ற சிந்தனையே மேலோங்கி நிற்கும். இப்படியாகக் குற்றத்தைக் காண்பது என்ற குற்றமே, ஸர்வேச்வரன் கொள்ளும் கோபத்திற்குக் காரணமாக உள்ளது. ஆகவே தனியாக வேறு எந்தவொரு குற்றமும் உண்டாக வேண்டியதில்லை என்று கருத்து. எனவே இந்தக் குற்றம் அவசியம் நீக்கப்பட வேண்டியதாக உள்ளது.

357. இதுதனக்கு அவஸரமில்லை.

**அவதாரிகை** - இதுதானெல்லாம் சொல்ல வேண்டுவது இதுதனக்கு அவகாசமிவனுக்கு உண்டாலிறே யென்கிறார் மேல் (இதுதனக்கவஸரமில்லை) என்று.

**விளக்கம் -** இவை அனைத்தும் உரைக்க வேண்டுவது, இதற்கான அவசியம் இவனிடம் உண்டானால் மட்டுமே ஆகும் என்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, பகவத் பாகவத தோஷ சிந்தநமாகிறவிது தனக்கு அவஸரந்தானிவனுக்கு முதலிலே யில்லையென்கை.

**விளக்கம் -** பகவானிடம், பாகவதர்களிடமும் குற்றத்தைக் காணுதல் என்பது முதற்கண் அவனிடம் இல்லை என்று கருத்து (அதாவது அவற்றை எண்ண இவனுக்கு நேரம் இல்லை).

358. ஸ்வதோஷத்துக்கும் பகவத் பாகவத குணங்களுக்குமே காலம் போருகையாலே.

**அவதாரிகை -** அதெத்தாலேயென்ன அருளிச்செய்கிறார் (ஸ்வதோஷத்துக்கும்) என்று தொடங்கி.

**விளக்கம் -** அது எப்படி என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, "நீசனேன் நிறைவொன்றுமிலேன்", "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு, மிந்நின்ற நீர்மை", "அமர்யாத: க்ஷுத்ர:", "வித்வேஷமாநமதராக விலோப மோஹாத்யாஜாநபூமி:", "அதிக்ராமந் நாஜ்ஞாம் தவவிதி நிஷேதேஷுபவதேப்யபித்ருஹ்யந் வாக்தீக்ருதிபிரபி பக்தாய ஸததம், அஜாநந் ஜாநந்வா பவத ஸஹநீயாகஸி ரத:", "ஸ்ரீரங்கேச த்வத் குணாநாமிவாஸ்மத்தோஷாணாம் க: பாரத்ருச்வா யதோஹம்" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே, அநவதிகமான தன்னுடைய தோஷாநுஸந்தாநத்துக்கு, அந்த தோஷத்தைப் பாராம லங்கீகரித்தருளின பகவானுடையவும்; "வேதம் வல்லார்களைக் கொண்டு" என்றும், "போதயந்த: பரஸ்பரம்" என்றும், "அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டா ரிங்கே திரிய, நறுமாவிரை நாண்மலரடிக் கீழ்ப்புகுதல், உறுமோ" என்றுஞ் சொல்லுகிறபடியே, புருஷகாரமும் உசாத் துணையும் ப்ராப்யருமான பாகவதர்களுடையவும்; "ஸமஸ்த கல்யாண

குணாம்ருதோததி:", "அஸங்க்யேய கல்யாணகுணகணௌக மஹார்ணவ", "யதா ரத்நாநி ஜலதே ரஸங்க்யேயாநி புத்ரக, ததா குணாஹ்யநந்தஸ்ய அஸங்க்யேயா மஹாத்மந:" என்றும், "நாஹம் ஸமர்த்தோ பகவத் ப்ரியாணாம் வந்தும் குணாந் பத்மபுவோப் யகம்யாந்" என்றுஞ் சொல்லுகிறபடியே அஸங்கயேயமாயிருந்துள்ள குணாநு ஸந்தாநங்களுக்குமே காலம் போந்து மற்றொன்றுக் கவகாசமில்லாமையாலே யென்கை. (இவற்றுக்கே காலம் போருகையாலே) என்கையாலே, ஸ்வகுண ஸ்மரணத்துக்கு அவகாசமில்லை யென்னுமிடமும் அர்த்தாத்ஸித்தமிறே.

**விளக்கம்** - கீழே உள்ள பல வரிகளிலும் கூறப்பட்டபடி தனது தோஷங்களை இவன் எப்போது எண்ணியபடி உள்ளான்.

- திருவாய்மொழி (3-3-4) – நீசனேன் நிறைவொன்றுமிலேன்
- திருவிருத்தம் (1) - பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு, மிந்நின்ற நீர்மை
- ஸ்தோத்ரரத்னம் (62) - அமர்யாத: க்ஷுத்ர: - வேதங்களில் கூறப்பட்ட விஷயங்களில் மரியாதை தவிர்த்தவனாக
- ஸ்ரீவரதராஜஸ்தவம் (76) – வித்வேஷமாநமதராக விலோப மோஹாத்யாஜாநபூமி: – காரணம் இன்றி ஒருவன் மீது விரோதம் கொள்ளுதல், குலம் போன்றவற்றால் கர்வம், உலக விஷயங்களில் ஆசை, கோபம்.
- ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-91) - அதிக்ராமந் நாஜ்ஞாம் தவவிதி நிஷேதேஷுபவதேப்யபித்ருஹ்யந் வாக்தீக்ருதிபிரபி பக்தாய ஸததம், அஜாநந் ஜாநந்வா பவத ஸஹநீயாகஸி ரத: - திருவரங்கனே! உன்னால் விதிக்கப்பட்டவை மற்றும் விலக்கப்பட்டவை என்பதை மீறி நடப்பவனாக, உனக்கும் உனது அடியார்களுக்கும் எப்போதும் பல அபசாரங்கள் செய்பவனாக, உன்னால் பொறுக்க இயலாத பல குற்றங்கள் உள்ளவனாக.
- ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-94) - ஸ்ரீரங்கேச த்வத் குணாநாமிவாஸ்மத் தோஷாணாம் க: பாரத்ருச்வா யதோஹம் – ஸ்ரீரங்கநாதா! உனது குணங்கள் போன்று எங்களுடைய குற்றங்களுக்கு எல்லை காண யாரால் இயலும்

மேலும் கீழே உள்ள வரிகளின்படி பகவானை அண்டுவதற்கு உதவுபவர்களாக உள்ளவர்களும், தனக்கு மிகவும் நன்மையைச் செய்பவர்களும் ஆகிய பாகவதர்களின் குணங்களை எப்போதும் எண்ணியபடியே உள்ளான்.

- திருவாய்மொழி ( 4-6-8) - வேதம் வல்லார்களைக் கொண்டு

- ஸ்ரீமத்பகவத்கீதை (10-9) - போதயந்த: பரஸ்பரம் - என்னிடம் மனம் வைத்து ஒருவருக்கொருவர் அறிந்தவர்களாக

- திருவாய்மொழி (8-10-3) - அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டா ரிங்கே திரிய, நறுமாவிரை நாண்மலரடிக் கீழ்ப்புகுதல், உறுமோ

மேலும் கீழே உள்ள வரிகளின்படி தனது குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும் பகவானுடைய எல்லையற்ற குணங்களை எப்போதும் எண்ணியபடியே உள்ளான்.

- ஸ்தோத்ரரத்னம் (18) – ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி: - அனைத்து திருக்கல்யாண குணங்களின் ஸமுத்ரமாக நீ உள்ளாய்.
- சரணாகதி கத்யம் – அஸங்க்யேய கல்யாணகுணகணௌக மஹார்ணவ - எண்ணற்ற கல்யாண குணங்களின் மிகப் பெரிய ஸமுத்ரமாக உள்ளாய்
- யதா ரத்நாநி ஜலதே ரஸங்க்யேயாநி புத்ரக, ததா குணாஹ்யநந்தஸ்ய அஸங்க்யேயா மஹாத்மந: - கடலில் உள்ள இரத்தினங்களை எவ்விதம் எண்ண இயலாதோ அது போன்று ஸர்வேச்வரனின் குணங்களையும் எண்ணமுடியாது
- நாஹம் ஸமர்த்தோ பகவத் ப்ரியாணாம் வந்தும் குணாந் பத்மபுவோப் யகம்யாந் – நான்முகனாலும் அறிய இயலாத பெருமைகள் கொண்ட ஸர்வேச்வரனுடைய பக்தர்கள் குறித்து என்னால் முழுவதுமாக உரைக்க இயலாது.

ஆக மேலே உள்ளவற்றைச் சிந்திப்பதற்கே காலம் சரியாக உள்ளதால், மற்றவற்றைக் குறித்து சிந்திக்க நேரம் இல்லை என்று கருத்து. எனவே தனது குணங்கள் குறித்துச் சிந்திக்கவும் நேரம் இல்லை.

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.......தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 114)

2-2-3 ஏறனைப் பூவனைப் பூமகள் தன்னை
வேறின்றி விண்தொழத் தன்னுள் வைத்து
மேறன்னை மீதிட நிமிர்ந்து மண் கொண்ட
மாறனில் மிக்குமோர் தேவுமுளதே

**பொருள்** - ரிஷபவாகனத்தில் உள்ள சிவனையும், தாமரையில் பிறந்த நான்முகனையும், தாமரையில் வீற்றுள்ள பெரியபிராட்டியாரையும் வேறுபாடு இல்லாமல் தனது திருமேனியில் பரமபதத்தில் உள்ளவர்கள் தொழும்படி வைத்தான்; மேலே உள்ள லோகங்கள் கீழே ஆகும் விதத்தில் உயரமாக வளர்ந்து, அனைத்து உலகங்களையும் அளந்து கொண்டான். இப்படிப்பட்ட ஸர்வேச்வரனைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் வேறு உண்டோ?

**அவதாரிகை** - ஸௌசீல்யத்தாலும், த்ரைவிக்ரமக்ரமணமாகிற அதிமாநுஷ சேஷ்டிதத்தாலும் இவனே ஈச்வரன் என்கிறார்.

**விளக்கம்** – தனது ஸௌசீல்யம் மற்றும் த்ரிவிக்ரமனாக நின்று, மனிதர்களால் செய்ய இயலாத செயலைச் செய்தல் போன்றவற்றால் இவனே ஸர்வேச்வரன் ஆகிறான். ஸௌசீல்யம் என்றால், "பரமபதத்தை விட்டு இறங்கி இந்த உலகிற்கு வந்து மிகவும் தாழ்ந்த மனிதர்கள் அளவுக்கு நம்மை இறக்கிக் கொண்டோமே",

என்று எண்ணாமை ஆகும். கர்ம வசப்பட்ட ஸம்ஸாரிகள் தங்களைக் காட்டிலும் தாழ்வாக உள்ளவர்களோடு பழகுவதைத் தங்களுக்குக் கௌரவக்குறைவு என்று எண்ணுவார்களே அல்லாமல், அதனைப் பெருமையாக எண்ணமாட்டனர்; ஆகவே ஸௌசீல்யம் என்ற இந்தத் தன்மை ஸர்வேச்வரனுக்கு மட்டுமே ஏற்படும் என்று கருத்து.

**வ்யாக்யானம்** - (ஏறனை) ஸர்வேச்வரன் "கருடவாஹநன்" என்று இறுமாந்திருக்குமா போலே, ஒரு எருத்தைத் தேடிக் கைக்கொள்ளாண்டிகளைப்போலே இறுமாந்திருக்கும். (பூவனை) "திருநாபி கமலத்திலே அவ்யவதாநேந பிறந்தவனன்றோ" என்று இறுமாந்திருக்கும் சதுர்முகனை. அதாவது, பத்மயோநித்வத்தாலே "அஜன்" என்று அபிமாநித்திருக்கை. (பூமகள் தன்னை) தாமரைப்பூவில் பரிமளம் உபாதாநமாகப் பிறந்தவளாய்,போக்யதைகவேஷையாய், "உனக்கு ஏற்கும்" என்னும்படியான ப்ராதாந்யம் தோற்ற இருக்கிறவளை. "தன்னை" என்று அவர்களில் இவளுக்கு உண்டான ப்ராதாந்யம் இருக்கிறபடி. "ஏறனை, பூவனை" என்கிற அநாதரோக்தியாலும், இவள் ப்ராதாந்யம் தோற்றுகிறது.

**விளக்கம்** - (ஏறனை) - ஸர்வேச்வரன் தன்னைக் கருடவாகனம் உடையவன் என்று எண்ணி கர்வத்துடன் உள்ளது போன்று, ஒரு காளை மாட்டைத் தேடி அது கிட்டியதால் கர்வத்தோடு உள்ள சிவன். (பூவனை) ஸர்வேச்வரனின் திருநாபிக்கமலத்தில் நேரடியாகப் பிறந்தவன் என்ற கர்வத்துடன் உள்ள நான்முகன்; எதனால் இந்தக் கர்வம் என்றால், எந்த ஒரு யோநியிலும் பிறக்காமல் தோன்றியதால் உண்டான கர்வம்; அதாவது தாமரையைத் தனது யோனியாகக் கொண்டு "அஜன்" என்ற பெயர் உள்ளதால் கர்வம். (பூமகள் தன்னை) - தாமரைமலரின் நறுமணத்திற்கு உபாதானக் காரணமாகப் பிறந்தவளும்; இன்பம் என்பதே ஒரு வடிவு கொண்டதோ என்றுள்ளவளும், திருவாய்மொழி (10-10-6) - உனக்கு ஏற்கும் - என்பதற்கு ஏற்ப முதன்மையாக உள்ளவளும் ஆகிய பெரியபிராட்டியார். "தன்னை" என்ற பதம் மூலம் ருத்ரன் மற்றும் நான்முகன் ஆகியவர்களைக் காட்டிலும் இவளுக்கு உள்ள முக்கியத்வம் உணர்த்தப்பட்டது. "ஏறனை, பூவனை" என்ற பதங்கள் மூலம் "ருஷபவாகனன், அப்ஜயோநி"

முதலானவை போன்ற முக்யத்வம் வெளிப்படுத்தப்படவில்லை; மாறாக “ஏதோ ஒரு ரிஷபம், ஏதோ ஒரு தாமரை” என்பதே உணர்த்தப்பட்டது; ஆனால் இவளுக்கு “தன்னை” என்பதால் முக்கியத்வம் கூறப்பட்டது.

**வ்யாக்யானம் -** (விண் தொழ வேறின்றித் தன்னுள் வைத்து) அந்யபரரான ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கும், அநந்யையான பெரியபிராட்டியார்க்கும் ஒக்க முகம் கொடுத்து வைக்கிற சீலத்தை அநுஸந்தித்து விண்ணினுள்ளார் தொழாநிற்பர்கள். “ப்ரஹ்மாதிகள் எப்போதும் திருமேனியைப் பற்றியிருப்பர்களோ?” என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, “ஓரோ ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுக்கிறான்; அந்நீர்மையை விடமாட்டாமையாலே ஆழ்வார்கள் அத்தையே வாய் புலற்றுகிறார்களத்தன்னையிறே” என்று அருளிச்செய்தார். (வேறின்றி) “கூறாளும் தனியுடம்பன்” என்கிறபடியே வ்யவஸ்திதமாக உடம்பைக் கொடுக்கை. (விண் தொழ) “மஞ்சா: க்ரோசந்தி” இதிவத். இங்குள்ளார் “ஐச்வர்யம்” என்றிருப்பார்கள்; அங்குள்ளார் “சீலம்” என்று தோற்றிருப்பார்கள். (மேறன்னை மீது இத்யாதி) மேல் தன்னை – உபரிதந லோகங்களை. “அப்பால் மிக்கு” என்கிறபடியே விஞ்ச வளர்ந்த பூமிப்பரப்பெல்லாம் திருவடிகளின் கீழே இட்டுக்கொண்ட. (மாறனில்) இவ்வதிமாநுஷ சேஷ்டிதத்தையுடைய ஸர்வேச்வரனிற் காட்டில். (மிக்குமோர் தேவுமுளதே) ஒக்கப் பரிமாறா நிற்க, “கட்டக்குடி” என்று கழிக்கலாம் தெய்வந்தானுண்டோ? எல்லார் தலையிலும் காலை வைத்தவனை “ஈச்வரன்” என்னவோ? இவன் காலிலே துடையுண்டவர்களை “ஈச்வரர்கள்” என்னவோ?

**விளக்கம் -** (விண் தொழ வேறின்றித் தன்னுள் வைத்து) - வேறின்றி என்றால் சமமாக, தன்னுள் வைத்து என்றால் தனது திருமேனியில் வைத்து. மற்ற பொருள்களிலும் தங்கள் மனதைத் திருப்புகின்ற நான்முகன் மற்றும் சிவன் போன்றவர்களுக்கும், ஸர்வேச்வரனாகிய தன்னை அல்லாது வேறு எதிலும் சிந்தனை இல்லாத பெரியபிராட்டிக்கும் ஒரே போன்று தனது திருமுகத்தைக் காண்பிக்கும் சீல குணத்தை எண்ணியபடி பரமபதத்தில் உள்ளவர்கள் வணங்கி நிற்பார்கள். ஸ்வாமி நஞ்ஜீயர், ஸ்வாமி பராசரபட்டரிடம், “நான்முகன் முதலானவர்கள் எப்போதும் அவன் திருமேனியில் உள்ளார்களோ?” என்று கேட்டார்; இதற்குப் பட்டர், அவர்களுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படும்போது தனது

திருமேனியில் இடம் அளிக்கிறான்; அந்த நீர்மைக் குணத்தை விட இயலாமல் ஆழ்வார்கள் அதனையே எப்போதும் உள்ளதாக உரைக்கிறார்கள்", என்றார். (வேறின்றி) – திருவாய்மொழி (4-8-1) – கூறாளும் தனியுடம்பன் - என்பதற்கு ஏற்ப வேறுபாடு இல்லாமல் தனது திருமேனியை அளித்தல். (விண் தொழ) – "விண் தொழ" என்பது விண்ணில் உள்ளவர்களைக் கூறுமோ என்றால், மஞ்சா: க்ரோசந்தி - கட்டில் ஓசை எழுப்புகிறது - என்பது போன்று இடவாகு பெயராகும். "மண்ணும் விண்ணும் தொழ" என்று கூறவேண்டாமோ என்று கேட்கலாம்; இதற்கு விடை அளிக்கிறார். இங்குள்ளவர்கள் "ஐச்வர்யம்" என்று நிற்பர், அங்குள்ளவர்கள் "சீலகுணம்" என்று நிற்பர். (மேறன்னை மீது இத்யாதி) - மேலுக்கும் மேலாக உயர்ந்து நிமிர்ந்தபடி. மேலே உள்ள லோகங்களை. திருநெருந்தாண்டகம் (5) – அப்பால் மிக்கு – என்று கூறுவதற்கு ஏற்ப, மிகவும் உயரமாக வளர்ந்து, இந்தப் பூமியின் பரப்பு முழுவதும் தனது திருவடிக்குள் அடங்குவது போல் நின்றான். (மாறனில்) – "மால் தன்னில்" என்று படிக்கவேண்டும். மனிதர்களால் செய்ய இயலாத அற்புதமான லீலைகள் கொண்ட ஸர்வேச்வரனைக் காட்டிலும். (மிக்குமோர் தேவுமுளதே) – மிக்கும் என்றால் மற்றும் என்று பொருள். அவர்களுடன் கலந்து நிற்பவன். "கட்டக்குடி" என்றால் தாழ்ந்தகுடி. ஒருவன் ஒரு ஊரில் யாகம் செய்வதற்குப் பொருள் திரட்டும் பொருட்டு வரும்போது, தனது தகுதிக்கு ஏற்காதவர்களுடனும் சரிசமமாக உள்ள செல்வந்தனை அந்த ஊரில் உள்ளவர்கள் காண்பித்து, "அவன் தரித்ரன், யாருக்கும் ஏதும் அளிக்கமாட்டான்" என்று கூறிக் கழிப்பது போன்று இவனைக் கழிக்க இயலுமோ? அனைவரது தலைகளிலும் தனது திருவடியை ஒரே போன்று வைத்தவனை ஸர்வேச்வரன் என்று கூறலாமோ அல்லது அவனுடைய திருவடிகளை யாருடைய தலைகள் ஏற்றனவோ அவர்களை ஸர்வேச்வரன் என்று கூறலாமோ?

2-2-4 தேவு மெப்பொருளும் படைக்க
பூவில் நான்முகனைப் படைத்த
தேவ னெம்பெருமானுக்கல்லால்
பூவும் பூசனையும் தகுமே

**பொருள்** – தேவர்களையும் மற்ற அனைத்து பொருள்களையும் படைப்பதற்காகத் தன்னுடைய திருநாபிக்கமலத்தில் நான்முகனை ஸர்வேச்வரன் படைத்தான். இப்படிப்பட்ட ஸர்வேச்வரனுக்கு அல்லாமல் மலர்களும் ஆராதனைகளும் மற்ற தெய்வங்களுக்குத் தகுமோ?

**அவதாரிகை** - ஸௌகுமார்யத்தாலும் முதன்மையாலும் இவனே ஈச்வரன் என்கிறார்.

**விளக்கம்** – மென்மை மற்றும் முதன்மை (பெருமை) ஆகிய இரண்டாலும் இவனே ஸர்வேச்வரன் என்கிறார். தேவன் என்ற பதம் மூலம் காந்தியை உரைத்து, அதன் மூலம் ஸௌகுமார்யம் கூறுகிறார்; எம்பெருமான் என்பதன் மூலம் முதன்மையை உரைக்கிறார்.

**வ்யாக்யானம்** - (தேவும் இத்யாதி) தேவஜாதியையும் ஸகலபதார்த்தங்களையும் உண்டாக்குகைக்காக ஒரு பூவிலே நாலு பூப்பூத்தாற்போலே சதுர்முகனை உண்டாக்கினவன். (தேவன்) சதுர்முக ஸ்ரஷ்டாவாகையால் வந்த த்யுதியைச் சொல்லுதல், இது தன்னை லீலையாகவுடையவன் என்னுதல், ஸௌந்தர்யாதிகளால் வந்த விளக்கம் என்னுதல். (எம்பெருமானுக்கல்லால்) ஸ்ருஷ்ட்யாத்யுபகாரத்தாலும், ஸ்ருஷ்டிக்கு உறுப்பான குணங்களாலும் என்னை எழுதிக்கொண்டவனுக்கல்லது.

**விளக்கம்** – (தேவும் இத்யாதி) - தேவர்களின் குலத்தையும், உலகில் உள்ள மற்ற அனைத்து பொருள்களையும் படைக்க எண்ணினான். இதனால் தாமரையில் நான்முகனைப் படைத்தான். ப்ரம்மன் என்று கூறாமல் நான்முகன் என்று ஏன் கூறவேண்டும்? ஒரு மலரில் நான்கு மலர்கள் தோன்றியது போன்று, நான்கு முகங்கள் கொண்ட நான்முகனைப் படைத்தான். (தேவன்) - தேவன் என்ற பதம் திவு என்ற தாதுவில் இருந்து வந்ததாகும்; இதற்கு க்ரீடா த்யுதி ஸ்துதி மோத மத ஸ்வப்ந காந்தி கதிஷு என்று பல பொருள்கள் உண்டு. இங்கு க்ரீடம் தரித்தவன் என்ற பொருள் கொள்ளலாம். அல்லது நான்முகனைப் படைத்ததால் மிகுந்த காந்தி உள்ளவன் எனலாம். அல்லது படைத்தல் போன்று தொழில்களை ஒரு

லீலையாகவே செய்பவன் எனலாம். காந்தியை உடையவன் காந்தன்; அதாவது அதிமநோஹரன்; அழகு போன்றவை காரணமாக வந்த விளக்கம் கொண்டவன். (எம்பெருமானுக்கல்லால்) - படைத்தல் போன்ற தொழில்களைச் செய்த உதவி காரணமாகவும், படைத்தல் என்பதற்கு அவசியமாக உள்ள குணங்கள் காரணமாகவும் என்னைத் தனக்கு என்று எழுதிக்கொண்டவன்; அவனுக்கு அல்லாமல்.

**வ்யாக்யானம்** - (பூவும் பூசனையும் தகுமே) சிக்குத்தலையனுக்குப் பூத்தகாது; பிச்சையுண்ணிக்குப் பூசனை தகாது; பூத்தகுவது ஸுகுமாரனுக்கு; பூசனை தகுவது முதன்மையுடையவனுக்கு; இவனையொழிந்தார்க்குத் தகாது என்கிறார். "ஸ ஏஷ ப்ருது தீர்க்காக்ஷஸ் ஸம்பந்தீ தே ஜநார்த்தந:" என்று ஸ்ரீபீஷ்மர் நெடும்போது அவனுடைய பரத்வத்தை உபபாதித்துக் கொண்டு போந்து, "ச்ருதி ஸித்தமான கண்ணழகையுடையவன் காண் உங்களுக்கு மைத்துனனாய்ப் புகுந்திருக்கிறான்" என்று பரத்வத்தை அவன் தலையிலே மாட்டெறிந்தார்; "அர்ச்யமர்ச்சிதுமிச்சாமஸ் ஸர்வே ஸம்மந்துமர்ஹத" என்ற ஸஹதேவன் தலையிலே புஷ்பவ்ருஷ்டியைப் பண்ணினார்களிறே. இத்தால் ஜ்ஞாநத்திற் காட்டில் வைராக்யத்துக்கு உண்டான ப்ராதாந்யம் சொல்லுகிறது.

**விளக்கம்** - (பூவும் பூசனையும் தகுமே) - சிக்குத்தலையன் என்றால் நான்முகன் அல்லது சிவன்; இவர்களுக்கு மலர்கள் சூடுவது பொருந்தாது. பிச்சை எடுத்து உண்ணும் சிவனை ஆராதிக்க இயலாது. ஆக மலர்கள் என்பது மென்மையாக உள்ளவனுக்கும், ஆராதனை என்பது முதன்மையாக உள்ளவனுக்கும் மட்டுமே பொருந்தும். தவத்தைச் செய்தபடி உள்ளதால் சிவனுக்குப் பொருந்தாது. ஆக மலர்களும், ஆராதனையும் மற்றவர்களுக்குப் பொருந்தாது. மஹாபாரதத்தில் – ஸ ஏஷ ப்ருது தீர்க்காக்ஷஸ் ஸம்பந்தீ தே ஜநார்த்தந: - நீண்டதாகவும் விசாலமானதாகவும் உள்ள திருக்கண்கள் கொண்ட க்ருஷ்ணன் உங்கள் மைத்துனன் - என்று பீஷ்மர் அவனுடைய பரத்வத்தை உரைத்துக் கொண்டு, "ச்ருதிகளில் காணப்படுகின்ற அழகான திருக்கண்கள் கொண்டவனே உங்களுடைய மைத்துனன் ஆவான்", என்று பரத்வத்தை அவன் மேல் ஏற்றி பீஷ்மர் உரைத்தார். ஆனால் அவருக்குத் தேவர்கள் மலர்கள் தூவி மகிழவில்லை.

ஆனால் - அர்ச்யமர்ச்சிதுமிச்சாமஸ் ஸர்வே ஸம்மந்துமர்ஹத – இந்த ராஜஸூய யாகத்தில் க்ருஷ்ணன் மட்டுமே அர்ச்சிக்கத் தக்கவனாக உள்ளான், இதனையே நீங்களும் தெரிவிக்கும்படி உள்ளீர்கள் – என்று ஸஹதேவன் உரைத்தபோது, அவன் மீது தேவர்கள் மலர்களைத் தூவி மகிழ்ந்தனர். ஆக இதன் மூலம் பீஷ்மரின் ஞானத்தைக் காட்டிலும், ஸஹதேவனுக்கு மற்ற விஷயத்தின் மீது உள்ள வைராக்யத்திற்கு உள்ள முதன்மை கூறப்பட்டது.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவிருத்தம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த

வ்யாக்யானம்

மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 79)

75. உலாகின்ற கெண்டையொளியம்பு எம்மாவியை யூடுருவக்
குலாகின்ற வெஞ்சிலைவாண்முகத்தீர் குனிசங்கிடறிப்
புலாகின்ற வேலைப் புணரியம் பள்ளியம்மானடியார்
நிலாகின்ற வைகுந்தமோ வையமோநும் நிலையிடமே

**பொருள் –** ஸஞ்சரித்தபடி உள்ள மீன் போன்ற மிகுந்த ஒளியுடன் கூடிய கண்கள் என்னும் அம்புகளானவை எங்களுடைய ஆத்மாவைத் துளைத்துச் செல்லும்படியாக வளைகின்ற கொடிய வில் போன்ற புருவங்கள் கொண்ட ப்ரகாசமான முகம் உள்ளவர்களே! நீங்கள் வசிக்கும் இடமானது - வளைந்த சங்குகளைக் கரையில் ஒதுக்குகின்ற அலைகள் கொண்ட திருப்பாற்கடலைப் படுக்கையாகக் கொண்ட ஸர்வேச்வரனின் பக்தர்கள் வசிக்கும் பரமபதமா அல்லது இந்தப் பூமியா?

**அவதாரிகை –** கலந்திருக்கிற தலைமகன் கொண்டாடுகிறபடியிலே ஒருவகையாதல்; அன்றிக்கே இயற்கையிலே ஐயமாதல்.

**விளக்கம் -** தலைமகன் தலைவியுடன் கலந்துள்ள நேரத்தில், அவளைக் கொண்டாடுவது போன்ற நிலை. அல்லது இயல்பாகவே எழக்கூடிய சந்தேகம்.

**வ்யாக்யானம்** - (உலாகின்ற கெண்டை) உலாகின்ற கெண்டை போலேயாயிற்று மௌக்த்யமிருக்கிறபடி. (ஒளியம்பு) இவன் பார்த்தபோது பாராதே, பாராத போதாகப் பார்க்கையாலே வரவு தெரியாதபடி காணாக்கோலாக வந்து தைக்கிறபடி. (ஒளியம்பு) கண் கண்டு தப்பவொண்ணாதிருக்கிறபடி. (எம்மாவியை யூடுருவ) இதுதான் புறம்பொருவர் மேல் தையாதே நம்மேல் தைப்பதுமாயிருந்தது. அது தன்னிலும் தோல் புரையே போமதன்றிக்கே ப்ராணனிலே தைப்பதுமாயிருந்தது. அது தன்னிலும் தோற்றம் பன்றிக்கே மறுபாடுருவத்தைப் பதுமாயிரா நின்றது. (குலாகின்ற வெஞ்சிலைவாள் முகத்தீர்) எப்போதுமொக்க வளைந்தபடியேயிருப்பதாய், ஒரு வ்யாபாரம் பண்ண வேண்டாதே கண்ட காட்சியிலே யிலக்கானா ரழியும்படியாய், அல்லா விற்களோபாதி கையிலே யிருக்கையன்றிக்கே முகத்திலேயிருக்குமதான வில் வர்த்தியா நின்றுள்ள முகத்தையுடையீர்! அன்றிக்கே "வாள்" என்று ஒளியாய், வெஞ்சிலையையும் ஒளியையுமுடைத்தான முகத்தையுடையீ ரென்னுதல். முகம் பழகின வில்லுக் காணுமிவனை நலிகிறது.

**விளக்கம்** - (உலாகின்ற கெண்டை) - ஸஞ்சரித்தபடி உள்ள மீன் போன்று கண்களின் அழகு உள்ளது. (ஒளியம்பு) - ஒளி என்றால் தேஜஸ். இவள் கண்களில் உள்ள தேஜஸ்ஸானது காண்பவர்களைத் தப்பவிடாதபடி வசீகரித்து விடும். இவன் பார்க்கும்போது அவள் பாராமல் உள்ளாள்; இவன் பார்க்காதபோது அவள் பார்ப்பதால், இவன் அறியாமல், வருவது தெரியாமல் வந்து தைக்கும் அம்பு. (ஒளியம்பு) - இவளுடைய கண்களைக் கண்ட பின்னர் தப்பிப்பது இயலாது. (எம்மாவியை யூடுருவ) - இது மற்றவர்கள் மீது பாயாமல் என் மீது பாய்வதாககவே உள்ளது. மேலும் தோலின் மேற்புறத்தைக் கழித்தபடி நிற்காமல், ப்ராணன் உள்ள இடம் தேடி வந்து தைக்கிறது. இது மட்டும் அல்ல, மேலாகத் தைப்பதோடு நிற்காமல் ஆழமாக ஊடுருவி நிற்கிறது. (குலாகின்ற வெஞ்சிலைவாள் முகத்தீர்) - குலாகின்ற என்றால் வளைந்த. எப்போதும் வளைந்தபடியே உள்ள வில் போன்ற புருவங்கள். அம்பு செலுத்தவேண்டும் என்றால் அப்போது நாண் தொடுத்தல் போன்ற செயல்கள் செய்யவேண்டாதபடி, தன்னைக் கண்டவர்கள் அல்லது தன்னால் காணப்பட்டவர்கள் அழியும்படி; கைகளில் உள்ள அம்புகள்

போன்றல்லாமல் முகத்திலே உள்ளதாய், அதனைத் தொடுக்கும் வில் போன்ற புருவம் கொண்ட முகம் உள்ளவர்களே! அல்லது "வாள்" என்ற பதம் ஒளி என்று கொண்டு, வளைந்த வில்லும் ஒளியும் நிறைந்த முகம் கொண்டவர்களே எனலாம். இவளுடைய முகமானது, வில்லைக் கண்ட வீரனாகிய இவனை நலிகிறது.

**வ்யாக்யானம்** – (குனிசங்கித்யாதி) வலம்புரி தொடக்கமான சங்குகளையிடறி. (புலாகின்ற) புலம்புகின்ற, சப்தியா நின்றுள்ள, திரைக்கிளர்த்தியையுடைய கடலாகிற வழகிய படுக்கையையுடைய ஸர்வேச்வரனுடைய. (புலாகின்ற) அச்சங்குகளினுடைய ஒளியாலே எப்போதுமொக்க ப்ரபாத ஸமயமே யாயிருக்கிற கடலென்னவுமாம். (அம்மானித்யாதி) நித்யவிபூதியிலே போதுபோக்கி ஓலக்கங்கொடுத் திருக்கையன்றிக்கே தன் ஸந்நிதாநத்தாலே கிளர்ந்து வருகிற திருப்பாற்கடலிலே புகுந்து, குடில் கட்டி நோக்கிக் கிடப்பாரைப்போலே இஜ்ஜகத்ரக்ஷணார்த்தமாக வந்து கண்வளர்ந்தருளுகிற இந்நீர்மைக்குத் தோற்றிருக்கிற நித்யஸூரிகள் நித்யவாஸம் பண்ணுகிற ஸ்ரீவைகுண்டமோ? அன்றிக்கே மானாவிச்சோலைபோலே ஆவதழிவதாய், காதாசித்கமாக, அவன் வந்து முகங்காட்டிப்போம் லீலாவிபூதியோ? உங்களுடைய வாஸஸ்த்தாநம். "வானவர்நாடு" என்கிறபடியே அவர்களிட்ட வழக்காயிருக்குமிறே அவ்விபூதி. அஹங்கார மமகாரங்களாலே ஈச்வர ஸ்வாதந்த்ர்யம் நடையாடாதபடி பண்ணிக் கொண்டிருப்பார்களிறே இங்குள்ளார். பிள்ளை திருநறையூரரையர், "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ? அன்றிக்கே அவனதான வையமோ" என்று பணிப்பராம்.

**விளக்கம்** - (குனிசங்கித்யாதி) - வலம்புரி போன்ற பலவிதமான சங்குகளைக் கரையில் சேர்த்து. இடறி என்றால் "தள்ளிக்கொண்டு" என்று பொருள். (புலாகின்ற) – அந்தச் சங்குகளின் ஓசை காரணமாக எப்போதும் விடியும் பொழுது போன்றே உள்ள ஸமுத்ரம். இப்படிப்பட்ட அலைகள் கொண்ட கடல் என்ற அழகான படுக்கையைக் கொண்ட ஸர்வேச்வரனுடைய. (அம்மானித்யாதி) – பரமபத்தில் உள்ளவர்களுக்கும் தனக்கும் பொழுது போகவேண்டும் என்று எண்ணிச் சபையில் எப்போதும் வீற்றிருப்பதோடு மட்டும் அல்லாமல், தனது இருப்பு காரணமாக ஓங்கி எழுகின்ற திருப்பாற்கடலில் ப்ரவேசித்து, ஒரு சிறிய

குடில் அமைத்துத் தங்குபவர்கள் போன்று, உலகைக் காப்பாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் கண்வளர்ந்தபடி உள்ளான். இப்படிப்பட்ட இவனுடைய நீர்மையில் தோற்றுப்போய், அவனில் எப்போதும் ஈடுபட்டபடி உள்ள நித்யஸூரிகள் வசிக்கும் பரமபதம் உங்கள் இருப்பிடமா? அல்லது உண்டாவதும் அழிவதுமாக உள்ளதும், அவன் அவ்வப்போது வந்து முகம் காண்பித்துச் செல்லுவதும் ஆகிய இந்தப் பூமி உங்கள் இருப்பிடமா? திருவாய்மொழி (3-9-9) - வானவர் நாடு – என்று கூறுவது போன்று பரமபதம் என்பது நித்யஸூரிகள் வைத்ததே சட்டம் என்பது போன்று உள்ளதாகும்; ஆனால் இங்குள்ள ஸம்ஸாரிகள் அஹங்காரம் மற்றும் மமகாரம் கொண்டவர்கள் என்பதால் ஸர்வேச்வரனின் ஸ்வதந்த்ரம் எப்போதும் வெளிப்படும்படி இங்குள்ளவர்கள் இருப்பர்; அதனால், தானே இந்தப் பூமியை ஆட்சி செய்தபடி உள்ளான். பிள்ளை திருநறையூரரையர், “அடியர்கள் ஆள்கின்ற பரமபதமோ? அல்லது அவன் ஆள்கின்ற பூமியோ?”, என்பார்.

**ஸ்வாபதேசம்** – இத்தால், ஆழ்வாரிருக்கிற விருப்பைப் கண்டார்க்கு “உபயவிபூதியிலும் இவர்படிக் கொப்பில்லை” என்று சொல்லும்படியிருக்கிறபடியைச் சொல்லுகிறது. அங்குள்ளார் நிரந்தர பகவதநுபவமே யாயிருப்பார்கள். இங்குள்ளார் இதர விஷயங்களினுடைய லாபாலாபங்களே யாயிருப்பர்கள். இவர்படி உபய வ்யாவ்ருத்தமாயிறே யிருப்பது. நிரந்தரமான பகவதநுபவமுமின்றிக்கே, அந்நபாநாதிகளால் தரித்திருக்கு மதன்றிக்கேயிறே யிருக்கிறது. இரண்டு விபூதியிலுங் கைக்கடங்காதபடியாயிருக்கிற விருப்பைச் சொல்லிற்று. இங்ஙனன்றாகி லிரண்டிடத்திலு மமையக் கூடாதிறே.

**விளக்கம்** - இதன் மூலம் ஆழ்வாரின் இருப்பைக் காண்பவர்கள், “இவருக்கு ஒப்பானவர் இரண்டு விபூதியிலும் இல்லை”, என்பர். அங்கு உள்ளவர்கள் எப்போதும் பகவத் அனுபவத்தில் ஈடுபட்டபடியே இருப்பர்; இங்கு உள்ளவர்கள் எப்போதும் மற்ற உலக விஷயங்களைச் சிந்தித்தபடியே இருப்பர். ஆழ்வாருக்கு இந்த இரண்டுமே அவ்வப்போது கிட்டுவதும் கிட்டாமல் போவதுமாக உள்ளது. அதாவது இங்கு உள்ளதால் நிரந்தரமான பகவத் அனுபவம் கிட்டாததால் இந்தப்

பூமியில் உள்ளவரோ என்றும், இந்த உலக விஷயங்கள் மீது பற்றில்லாமல் உணவும் ஏற்காமல் உள்ளதால் அந்த உலகத்தில் உள்ளவரோ என்றும் சந்தேகம் எழுகிறது.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்